<u>4வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், உடுமலைப்பேட்டை</u>

சாட்சியின் சாட்சியம் திரு.M.நம்பிராஜன்,பி.ஏ.,பி.எல்., 4வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி, உடுமலைப்பேட்டை அவர்களால் உறுதி கூறப்படுகிறது.

அ.வ.எண். 833/2023 நாள்: 28.10.2025 பி.வா.சா.1

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சரண்யா | தொழில் | : | முட்டை வியாபாரம் |
| க/பெ | : | ராமகிருஷ்ணன் | கிராமம் | : | உடுமலைபேட்டை |
| வயது | : | 37 | தாலுகா | : | உடுமலைபேட்டை |
| | | | மாவட்டம் | : | திருப்பூர் |

<u>சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, முதல் விசாரணை -</u>

நான் இந்த வழக்கில் பிரதிவாதி ஆவேன். இந்த வழக்கில் எனது சாட்சியத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அதில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும். அதை பதிவு செய்து கொள்ள வேண்டுகிறேன்.

பி.சா.ஆ.1 – ஆறுமுகம் என்பவர் எனக்கு எதிராக திருப்பூர் காவல் நிலையத்தில் கொடுத்த புகாரின் அடிப்படையில் பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையின் பதிவிறக்க நகல்

பி.சா.ஆ.2 – Crl.O.P.16978/2023–ன் சென்னை உயர் நீதிமன்ற உத்தரவின் பதிவிறக்க நகல்

மேற்படி ஆவணங்கள் வாதி தரப்பு வழக்கறிஞர் ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது.

வாதி தரப்பு குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சி விசாரிக்கப்பட்ட, சாட்சியின் சாட்சியம் தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு, சாட்சியாலும் படித்து பார்க்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பு சாட்சியால் கையொப்பம் இடப்பட்டது.

M NAMBIRAJAN
Digitally signed by M NAMBIRAJAN
Date: 2025.10.28 18:13:49 +0530

4வது கூடுதல் மாவட்ட நீதிபதி,
உடுமலைப்பேட்டை.